OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.3.2020

Accepted: 7.3.2020

Published: 01.04.2020

Citation:
Vijayakumar, S. (2020). Social and Revolutionary Ideas in Bharathidasan's Epic, Kannagi. *Shanlax International Journal of Tamil Research*, *4*(4), 116–120.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2351

*Corresponding Author:
svkrau@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Social and Revolutionary Ideas in Bharathidasan's Epic, Kannagi

**Dr. S. Vijayakumar***
*Assistant Professor, Department of Tamil*
*Goverment Arts College (Autonomous), Karur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-5089-555X

**Abstract** –The Revolutionary poet Bharathidasa's has created a special place for himself in the twentieth century. In those days it was considered that the 'Anna Chathiram'(Food Oblation Centre) maintained by people was moral duty. Unfortunately this is not practiced in the present. It needs reformation. "In the former Chief Minister of Tamil Nadu Dr. Annadurai has compared the American poet Walt Whitman and Bharathidasa- and has also called Walt Whitman has America's Bharathidhasan" (Revolutionary poet P.Muthiah P-63). Bharathidas argues that brides (women) are not inanimate objects handed over by father to the bridegrooms. From this argument of Bharathidasa's to facts are revealed. One is to lead married life and another is to remain chaste.
Bharathidasa's ideology of opposing God and respecting man has revealed his reformational attitude. Further he has also registered his ideas on the duty of women new liberation, political aspects and superstitious beliefs. Silapathigaram and Manimegalai are two great revolutionary epics in Tamil. As a revolutionary poet Bharathidhasan has also created epics of revolutionary ideas.

**Key Words:** Tamil modern poem, Bharathidasan's poems, Kannagi epic, Political aspect, Duty of women, Suprsitions.

## References

1. Muthiah, P. *Revolutionary poet*, P. 63.
2. Bharathidasan, Kannagi P. 4.
3. Bharathidasan, Kannagi P. 15.
4. Thirukural P-230.
5. Bharathidasan, Kannagi Puratchi Kappiyam P. 198 - 199.
6. Bharathidasan, Kannagi P. 83.
7. Bharathidasan, Kannagi P. 87.

# கண்ணகி புரட்சிக் காவியத்தில் சமூக சீர்திருத்த சிந்தனைகள்

***முனைவர் ச. விஜயகுமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லுரி(தன்னாட்சி), கரூர்

***ஆய்வுச் சுருக்கம்*** – *இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் புரட்சிக் கவி பாரதிதாசன் தனக்கான இடத்தைப்பெற்றவர். சமுதாயச் சிந்தனையாளர்கள் பெரும்பாலும் இலக்கிய உலகிலேயே தோன்றுவர். "பைந்தமிழ் நான்மறை வகுத்த முறையானது செத்துப்போயிற்றே? ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் ஒன்றுபடுதலே திருமணமாகும். அது பற்றிய பேச்சு இங்கு இல்லை. தந்தைமார் ஒத்துக்கொண்டார் என்பதை மட்டும் கேட்கின்றோம். மணமகள் என்பவள் தந்தையால் எடுத்துக்கொடுப்பதற்கான ஓர் அஃறிணைப் பொருளா?" மணவாழ்க்கைக்கு உடன்படுதல், கற்பினை வலியுறுத்தல், கடவுட்கொள்கைக்கு எதிர்ப்பு, மானிட வாழ்க்கைக்கு மதிப்பு ஏற்படுத்தியதின் மூலம் சீர்திருத்த சிந்தனை வெளிப்படுவதை அறிய முடிகிறது. புதியவிடுதலை பெண்ணின் கடமை. அரசியற்கோட்பாடு, வேள்விஎதிர்ப்பு போன்ற புரட்சிக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன கண்ணகியின் வாழ்வைக்கொண்டு பாவேந்தர், மனைவியின் கடமையை எடுத்துரைக்கின்றார். கணவன் இறந்தபின் மனைவி அழுது புலம்புவதோ அண்டை அயல் மாதர்களுடன் கூடி ஒப்பாரி வைப்பதோ அவளின் கடமையன்று. அழுதுகொண்டே காலத்தைப் போக்காமல் எதிர்காலச் சிந்தனையில் ஈடுபடவேண்டும் என்கிறார். சிலப்பதிகாரத்தை முதல் நூலாகக்கொண்டு பாடிய பாவேந்தர் தாம் படைத்த காவியத்தைச் சீர்திருத்த காவியமாகப் படைத்துள்ளார்.*

***முக்கியச் சொற்கள்:*** *சமூக புரட்சி, சீர்திருத்தம், புதிய விடுதலை, பெண்ணின் கடமை, அரசியற்கோட்பாடு, வேள்வி எதிர்ப்பு, கணவனைத் தொழுதல், கற்பினைப்போற்றுதல்.*

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் புரட்சிக் கவி பாரதிதாசன் தனக்கான தனி இடத்தைப்பெற்றவர். அரை நூற்றாண்டுக் காலம் தமிழிலக்கிய உலகில் பாவேந்தர் பெரும் வேந்தராத் திகழ்ந்தார். அவர் வாழ்வும், பணியும் தமிழுக்கு வளம் தேடிததந்தன. தமிழ்ச் சமுதாயத்தில் திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், பாரதியார், போன்றவர்கள் சமுதாயச் சிந்தனை மிக்க சீர்திருத்தவாதிகள் ஆவர். இவ்வரிசையில் பாவேந்தர் பாரதிதாசனும் குறிப்பிடத்தக்கவர். பாவேந்தரைப் புரட்சிக் கவி என்று பெயர் சூட்டி அழைத்துப் பாராட்டும் தமிழ் உலகம் அவர் பாடிய சீரதிருத்தக் கருத்துக்களையே நினைவு கூர்கின்றது. பாவேந்தரின் தனிப் பாடல்களில் புரட்சி வேகமும், சீர்திருத்தக் கருத்துக் குமுறலும் அதிகம். கண்ணகி புரட்சிக் காப்பியம் மூலநூலைத் தழுவி எழுந்தமையால் கதை மாற்றத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

## தமிழர் திருமணம்

பாவேந்தர் திருமணம், கற்பு என்பன பற்றிக் கூறும் கருத்துக்கள் பழமையை ஒட்டியன. இக்கருத்துக்களை எடுத்துக்கூறுமிடங்களில் தமிழ் ஒழுக்கத்தைக்காட்டி காட்டி ஆரிய ஒழுக்கத்தைச் சாடுவர். ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் ஒன்றுபடுவதே தமிழர் கண்ட திருமணம் என்பது பாவேந்தர் கொள்கை. இந்நோக்கில் கோவலன் கண்ணகி திருமணத்தை ஆராய்வோம்.

சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடல், கோவலன் கண்ணகி திருமணமுறையை விளக்குகிறது. இத்திருமணமுறை வைதிக மணத்தினை அடியொற்றியது என்று அடியார்க்கு நல்லார் கருதுவர். நாவலர் சோமசுந்தர பாரதியார் கோவலன் கண்ணகி மணம் தமிழர் பழமரபாகிய களவின் வழி கற்பறம் என்னும் காதல் மணமே என்று நிறுவுவர். பாவேந்தர் அடியார்க்கு நல்லார் கருத்தினை ஒட்டி இளங்கோவடிகள் கூறும் மணம் மறையோர் மன்றல் என எண்ணுகிறார். ஆதலின் இளங்கோவடிகள் கூறிய இம்மணக்கொள்கை பொருந்தாது என்று கருதி இம்மணநிகழ்ச்சியைத் தமிழ் மணமாக மாற்றுகின்றார். இவ்வாறு மாற்றுவதற்காக சேந்தனார் என்னும் பாத்திரத்தைப் பதியதாகப் படைத்துக் கொள்கிறார்.

மாசாத்துவான் ஊர்ப் பெருமக்களை நோக்கி என் மகன் கோவலனுக்கு மாநாயக்கர் தம் மகளாகிய கண்ணகியைக் கொடுக்க இசைந்து மணத்தை முடித்து வைக்க வேண்டுகின்றேன் என்றான். அது கேட்ட சேந்தனார் பின்வருமாறு பேசுகிறார்.

“பைந்தமிழ் நான்மறை வகுத்த முறையானது செத்துப்போயிற்றே? ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் ஒன்றுபடுதலே திருமணமாகும். அதுபற்றிய பேச்சு இங்கு இல்லை. தந்தைமார் ஒத்துக்கொண்டார் என்பதை மட்டும் கேட்கின்றோம். மணமகள் என்பவள் தந்தையால் எடுத்துக் கொடுப்பதற்கான ஓர் அஃறிணைப் பொருளா? என மறுக்கின்றார்.” (கண்ணகி புரட்சி காப்பியம் பக.4) இப்பேச்சிலிருந்து இரு செய்திகள் வெளிப்படுகின்றன.

மணமகள் என்பவள் அஃறிணைப் பொருளன்று. அவள் உரிமை படைத்தவள்.

பாவேந்தர் சமுதாயத்தில் தமிழர் திருமணமே வேண்டுமென்று விரும்புகிறார். அவ்வாறு விரும்புவர் ஆரியத் திருமணத்தை வெறுக்கின்றார். கோவலன், கண்ணகி திருமணத்தை நடத்த ஆரியன் வருகின்றான். அத்திருமணம் பற்றி பின்வருமாறு கூறுகிறான்.

> **“மந்திரங்கள் ஆரியத்தால் செய்ய வேண்டும்**
> **மட்டுமல்ல சடங்குகளும் அப்ப டித்தான்**
> **பிந்திஅந்த வதூவரை ஒன்று சேர்க்கப்**
> **பெரியதொரு சடங்குண்டே! மந்தர முண்டே**
> **அந்தஎலாம் செய்யத்தான் வேண்டும் ஆனால்**
> **பெரும்பாலும் அகட்டிடுவேன் கூலி மட்டும்**
> **எந்த மட்டும் குடுக்கனுமோ குடுக்க வேனும்”**
> **(க.பு. கா.பா.15)**

எனக்கு கொடுக்கவேண்டிய கூலியை மட்டும் அளவில் குறைக்கக் கூடாது என்று அவன் கூறுவதால் அம்மணம் பொய்யாமை நிறைந்தது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அமைந்தது என்று எள்ளி நகையாடுகின்றார்.

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்னும் சிறந்த பண்பு தென்னாட்டுத் தமிழர்க்கு உரியது. அன்பு, அறம், வாய்மை ஆகியவற்றைக்கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் பிறந்தவர்கள் அடைகின்ற துன்பங்களை இவர்கள் அடைய மாட்டார்கள் அவர்களின் பிள்ளைகளும் துன்பமடைய மாட்டார்கள். (பா.181)

ஒருத்தியை பலர் மணந்து வாழ்வதை அறம் என்று சொல்லுபவர்கள் தீயவர்கள். ஆவர்களைத் தமிழர்கள் உமிழ்வார் என்று இகழ்கின்றார். (பா.241)

### கற்பினை வலியுறுத்தல்

இக்காலத்தில் கற்பு என்பது வேண்டத்தகாதது ஒன்று என்பது போல் பேச்சிலும் எழுத்திலும் வருவதைக் காண்கிறோம். இச்சொல்லுக்குப் புதுப்புது விளக்கமும் தருகின்றனர். கற்பு கொள்கையை எதிப்பதே சீர்திருத்தமாகவும் கருதுகின்றனர். ஆனால் பாவேந்தர் கற்பினை வலியுறுத்துதல் சீர்திருத்தமாகவே கருதப்பெறும் பெண்ணடிமை வேண்டாம் என்று பாவேந்தர் கூறுவதால் கற்பையும் அவர் வெறுத்து ஒதுக்கினார் என்று கொள்ளுதல்கூடாது. “மண்ணுக்கு மணிகள் போல் விண்ணுக்கு

வெண்ணிலவு போல் வீட்டுக்கு சுடர் விளக்கு போல்நல்லபெண்ணுக்குமூன்றுதமிழ்போல் உலகப் பெண்களுக்குக் கற்பொழுக்கம் வேண்டும் என அழுத்தமாகக் குறிப்பர்". (பா.230) கண்ணகியின் வாழ்வு உயாந்த கற்பு வாழ்வு, ஆதலின் கற்புக்குப் பெருமை தந்து பாவேந்தர் வலியுறுத்தியுள்ளார்.

**கணவனே தெய்வம்**

பண்டுதொட்டு இன்றுவரை கற்புடைப் பெண்களுக்குத் தெய்வமாக விளங்கும் பெருமை கணவனுக்கே உண்டு. தாய், தந்தை இவர்கள் தெய்வமல்லர். பாவேந்தர் இவ்வாறு கூறும்பொழுது அவர் தம்மையும் மறந்து அவர் தெய்வம் என்ற கொள்கையை ஏற்கக் காண்கிறோம். இவருக்குத் தெய்வம் என்பதில் உடன்பாடில்லை என்றாலும் கணவனைத் தெய்வமாகக் குறிப்பிட்டிருத்தல் கருதத்தக்கது. திரைமறைவில் இருப்பதைத் தெய்வம் என்று சொல்லுவதைப் புளுகு என்று சாடுகிறார். ஆரியர்கள் பொய் வைத்த வாழ்க்கை உடையவர்கள் (பா.83) ஆதலால் பொய்யானதெய்வத்தைப்படைத்துவிட்டனர். தமிழர்கள் மெய் வைத்த வாழ்கையினை உடையவர்கள். ஆதனால் கண்கண்ட கணவனையே தெய்வமாகக் கருதினார்கள். இங்கே கடவுட் கொள்கைக்கு எதிர்ப்பும், மானிட வாழ்க்கைக்கு மதிப்பும் ஏற்படுத்தியதின் மூலம் சீர்திருத்த சிந்தனைகள் வெளிப்படுவதை அறிய முடிகிறது.

**கணவனைத் தொழுதல்**

**தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**

என்னும் குறளில் வள்ளுவர் கற்பு நலம் சான்ற பெண்ணின் பெருமை பேசுகின்றார். தெய்வத்தைத் தொழமாட்டாள். கணவனையே தொழுவாள் என்பது இயல்பான பெருளாம். இதனைக் ஏற்றுக்கொண்ட பாவேந்தர்க் கண்ணகி கதிரெழுந்து விடிகின்ற நேரத்தில் கணவனைத் தொழுதாள் என்று காட்டுகிறார்.

**கதிர்எழுந்து விடிய வினைச் செய்யும் போதில்**
**காதலிள மங்கையர்கள் கண்விழித்தே**
**எதிருற்ற கணவர்தம்மைத் தொழுத**
**வண்ணம் எழும்போதில் (பா.87)**

இவ்வரிகளைப் படிக்கும்போது திருக்குறள் கருத்தில் ஒரு பகுதி இடம்பெற்றிருப்பதைக் காணலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் பாடிய கருத்தினையே எதிரொலிக்கும் பாவேந்தரை எவ்வாறு சீர்திருத்தவாதி என்று கூறுதல் பொருந்தும் என்ற வினா எழும். மேலும் இக்கருத்து பழமைக்கு அரணல்லவா செய்கிறது என்று கூறவும் கூடும். பாவேந்தர் புதுமைப் பெண்ணைப் பாடி ஆண்களுக்கு பெண்களும் ஒத்த நிலையர் என்று உலகறியச் செய்தவர். ஆயினும் மரபுவழி வந்த குடும்பவாழ்கையை மதித்தவர். நல்ல குடும்பத்தைப் பல்கலைக் கழமாகக் கண்டு குடும்பவிளக்கு எழுதியவர். நல்ல குடும்பத்தில் கணவனை மனைவி மதித்தால். கணவனும் மனைவியை மதிப்பான் என்ற வாழ்வியல் நோக்கில் கணவனைத் தொழுது எழுதல் கற்புக்கரசியின் கடன் என்று குறிப்பிட்டுள்ளார்.

**பெண்ணின் கடமை**

கண்ணகியின் வாழ்வைக்கொண்டு பாவேந்தர் மனைவியின் கடமையை எடுத்துரைக்கின்றார். (பா.198,199) கணவன் இறந்தபின் மனைவி அழுது புலம்புவதோ அண்டைஅயல் மாதர்களுடன் கூடி ஒப்பாரி வைப்பதோ அவளின் கடமையன்று. அழுது கொண்டே காலத்தைப் போக்காமல் எதிர்காலச் சிந்தனையில் ஈடுபடவேண்டும் என்கிறார். இது, புரட்சிகரமான சிந்தனை ஆகும்.

பெண்ணுக்குத் தன்னலம் என்பது சிறிதும் கூடாது. அவள் தன் குடிப்பெருமையைக் காப்பதனையே குறிக்கோளாகவும் முதற் கடமையாகவும்கொள்ள வேண்டும். இவ்வாறில்லாமல் கணவன் இறந்துவிட்டால் அவன் சொர்க்கலோகம் அடைவான் என்பதற்காக இங்குள்ள பார்ப்பனர்களுக்கு அரிசி முதல் செருப்புவரை கொடுப்பது மடமை என்றும் சாடுகின்றார்.

### புதிய விடுதலை

இன்றைய உலகத்தைக் குறைபாடுடைய உலகமாக பாவேந்தர் காண்கிறார். இதனால் சமுதாய விடுதலையைப் பாடியவர். திருடித்தான் வாழ வேண்டும் என்றால் அதனைவிட சாவதே மேல் என்று கண்ணகி புரட்சிக்காவியத்தில் (பா.242) குறிப்பிட்டுள்ளார். திருட்டு முதலிய குற்றங்களைப் பாவேந்தர் வெறுத்துப் பேசுகின்றதை அறிய முடிகிறது.

### அரசியற் கோட்பாடு

அரசனாக இருப்பவர் தன் வழக்கைத் தானே தன்பால் சொல்லிக்கொள்வதும், தீர்பையும் தானே கூறிக்கொள்வதும் முறையன்று என்று குறிப்பிடுகின்றார் ஆட்சி நடத்துபவன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டால் அவன் வழக்கைமற்றவர்களேவிசாரிக்கவேண்டும். தீர்ப்பையும் மற்றவர்களே கூற வேண்டும். அரசனுடைய விளையாட்டெல்லாம் சட்டம் ஆகிவிடக்கூடாது. அமைச்சர்கள், அவையத்தார்கள், படைத்தலைவர்கள் இவாகள் அரசனுக்கு நீதிநெறி காட்டுபவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் அவன் செய்யும் மறத்திற்கு துணையான ஆட்களாக இருந்து விடக்கூடாது. அவ்வாறு அமைந்துவிட்டால் அறம் நிலைக்காது. அமைச்சன் முதலியவர்களை அரசன் காப்பாற்றுவது பொதுமக்களின் வரிப்பணத்தால், என்ற உண்மையை அமைச்சர்கள் உணர வேண்டும். இவ்வாறு உணராமல் அரசனின் அழிவுக்குத் துணைபோவார்களேயானால் இவர்களால் பயனில்லை.

சட்டம் என்பது ஒருபாற்கோடாது இருத்தல் வேண்டும். சமயப்பற்றோ சாதிப்பற்றோ தன்னலப்பற்றோ இருக்குமேயானால் அது சட்டமன்று என பாவேந்தர் கூறும்பொழுது அரசு, அமைச்சு, சட்டம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று கருதிய சிந்தனைச் செறிவைக் காண்கிறோம்.

### வேள்வி எதிர்ப்பு

"யாகத்தில் பசுவைக் கொல்லலாம் என்று வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ளது" இதனைஒட்டியே பரிமேலழகர், தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும். செல்வம் பெரிதாகும் என்று இல்வாழ்வார்க்கு கூறப்பட்டதாயினும் என்று எழுதியுள்ளார்.

> **"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
> **உயிர்செகுத் துண்ணாமை நன்று"**

என்று திருவள்ளுவரும் உயிரைக் கொல்லுதலும், கொன்று உண்ணுதலும் கூடாது என்று பாடியுள்ளமை நினைவு கூறத்தக்கது.

பாவேந்தர்கண்ணகி புரட்சிக் காப்பியத்திலும் வேள்வியைப் பற்றி பாடியுள்ளார். தேவரென்றும் உவப்பென்றும் ஆடுவெட்டும் சிறு செயலைத் தமிழரெல்லாம் வெறுக்கின்றார்கள். (க.பு.கா.241) என்று வேள்வியைச் சிறுசெயல் எனக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தை முதல்நூலாகக் கொண்டு பாடிய பாவேந்தர் கண்ணகி காவியத்தைச் சீர்திருத்த சிந்தனை காவியமாகவே படைத்துள்ளார்.

### சான்றாதாரம்

1. ப முத்தையா. புரட்சிக்கவிஞர் பக் .63
2. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம் பக்.4
3. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 15
4. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 181
5. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 15
6. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 230
7. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 83
8. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல் 198, 199
9. திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 230
10. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல். 87
11. திருக்குறள்.
12. பாரதிதாசன் கண்ணகி புரட்சி காப்பியம், பாடல். 241
13. சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப்பாடல், அடி50-53.